# பருவ மழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் - துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் ஆய்வு !















வடகிழக்குப் பருவ மழைக்காலத்தை முன்னிட்டு, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, மழை நேர முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆய்வு செய்து வருகிறார். குறிப்பாக, சென்னை மற்றும் புறநகர்ப்பகுதிகளில் தண்ணீர் தேங்குவதைத் தடுக்க கழக அரசு இரவு – பகலாக தூர்வாருதல் உள்ளிட்ட பணிகளை மேற்கொண்டு வருகிறது. அந்த வகையில், பக்கிங்காம் கால்வாயின் முகத்துவாரம் அமைந்துள்ள முட்டுக்காட்டில் நடைபெற்று வரும் தூர்வாரும் பணிகளை நேற்று முன்தினம் (13.10.2024) மாலை துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆய்வு செய்தார்கள். சென்னையைப் பொறுத்தவரை, கொசஸ்தலை ஆறு, அடையாறு, கூவம் ஆறு, பக்கிங்காம் கால்வாய் வழியாக மழை நீர் கடலில் கலந்திட ஏதுவாக, நீர்வளத்துறை சார்பில் நீர்வழித்தடங்களைத் தூர்வாரும் பணிகள் குறித்து அதிகாரிகள் – அலுவலர்களிடம் கேட்டறிந்தார். இதற்காக 200க்கும் அதிகமான எந்திரங்கள் – ஆயிரக்கணக்கான பணியாட்கள் என 80 நாட்களுக்காக மேலாக நடைபெற்று வரும் இப்பணிகள் தொடர துணை முதல்வர் அவர்கள் ஆலோசனைகள் வழங்கினார்கள். அப்போது அமைச்சர் தா.மோ.அன்பரசன், சட்டமன்ற உறுப்பினர் அரவிந்த் ரமேஷ், துணை முதலமைச்சரின் கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ் ஐ.ஏ.எஸ்., சிறப்புத் திட்ட செயலாக்கத்துறை செயலாளர் மருத்துவர் தாரேஷ் அகமது ஐ.ஏ.எஸ்., செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் அருண்ராஜ் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.